37–

## மாணவர் விடுதி

***19835–திரு. என்.கே. பெருமாள்:**

*மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–*

*(அ) விளாத்திகுளத்திலுள்ள ஆதிதிராவிடர் மாணவர்களுக்கு விடுதி அமைத்துத் தர அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) விளாத்திகுளத்தில் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டுவரும் அரசினர் ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதிக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சராக டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகுதான், அரசு சொந்தக் கட்டடமாக கட்டுமானப் பணி கட்டப்பட்டு வருகிறது.*

*முற்பகல் 10–40*

**திரு. என்.கே. பெருமாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடும் நிதி நெருக்கடியிலும், சமூக நீதி காத்துவரும், தமிழகத்தின் தன்னிகரற்ற பெரும் தலைவியாக விளங்கிவரும், வள்ளலின் வாரிசாம் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்கி என் வினாவைத் தொடங்குகின்றேன். ஆதிதிராவிட மாணவர்கள் விடுதியை அமைத்துக்கொடுத்ததற்கு தொகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றியை மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு காணிக்கையாக்குகிறேன். தமிழகத்தில் ஆதிதிராவிட மாணவர்களுக்கு விடுதி கட்டடம் மட்டுமல்ல, 11, 12 ஆம் வகுப்பு படிக்கின்ற மாணவிகளுக்கும் சைக்கிள்களை வழங்கி, ஆதிதிராவிடர் மக்களின் பாதுகாவலராக விளங்குகின்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால

2002 அக்டோபர் 28]

ஆட்சியில் தமிழகம் முழுவதும் எத்தனை ஆதிதிராவிடர் மாணவர் விடுதிகள் அமைக்கப்பட்டு வருகின்றன என்பதை பேரவைத் தலைவர் மூலமாக அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் குறிப்பாக ஆதிதிராவிட மாணவ, மாணவியர்களின் கல்வி முன்னேற்றத்திற்காக நம்முடைய முதலமைச்சர் அம்மா அவர்களுடைய அரசு செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களில் ஒன்றான விடுதிகள் அமைத்துத்தரும் திட்டத்தின்கீழ் கிட்டத்தட்ட 731 மாணவர் விடுதிகளும், 345 மாணவியர் விடுதிகளும் ஆக மொத்தம் 1076 விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. அவற்றில் வாடகைக் கட்டடங்களாக 574 விடுதிகள் இயங்கி வருகின்றன. நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகுதான் இப்படிப்பட்ட மாணவ, மாணவியர் கல்வியில் முன்னேற்றம் அடைய வேண்டும், அவர்களுடைய கல்வித் தரம் உயர வேண்டும் என்கின்ற சீரிய நோக்கத்தோடு, தமிழகத்தினுடைய நிதி நிலையில் நெருக்கடி இருக்கின்றபோதிலும், HUDCO–விடமிருந்து 31.37 கோடி ரூபாய் கடனைப்பெற்று, சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியின் மூலமாக நிதியைப் பெற்று, தமிழ்நாடு முழுவதும் 143 விடுதிகள் கட்டடப் பணி நடந்து வருகிறது. அவற்றிலே 73 விடுதிகள் முடியும் தருவாயில் உள்ளன. அதுபோக, 2001–2002 ஆம் ஆண்டில் தனியாக 10 விடுதிகளின் கட்டடப் பணி நடந்து வருகின்றது. ஆக, தமிழகத்தில் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகுதான் 153 விடுதிகளுக்கு கட்டடப் பணி நடந்துவருகிறதென்பதை மிக்கப் பணிவோடு மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். குறிப்பாக, தூத்துக்குடி மாவட்டத்தில் கிட்டத்தட்ட 42 விடுதிகள் இயங்கி வருகின்றன. அவற்றிலே 26 விடுதிகள் வாடகைக் கட்டடங்களாக இயங்கி வந்தன. புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்ற பிறகுதான் அந்த 26 வாடகைக் கட்டடங்களாக இயங்கி வந்த விடுதிகளில் தற்போது 12 விடுதிகள் கட்டுமானப் பணிகள் விரைவாக நடந்துகொண்டு வருகின்றன. விரைவிலே புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இலட்சியமாக உறுதிகொண்டிருக்கின்றபடி இன்னும் 2 ஆண்டுக்குள் அனைத்து வாடகைக் கட்டடங்களையும் சொந்தக் கட்டடங்களாக மாற்றிக் காட்டுவார்கள் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை. சந்தேகப்பட வேண்டாம் என்று மாண்புமிகு உறுப்பினர்களுக்குப் பணிவோடு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.